# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

SC.No.190/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.6

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.ரமேஷ் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 6th day of January, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது கலிங்கப்பட்டியில் என் தாயாருடன் வசித்து வருகிறேன். நான் செவல்பட்டி தீப்பெட்டி ஆபிஸில் வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரிக்கு என் மாமா மகள் காயத்ரியை திருமணம் செய்து கொடுத்திருந்தோம். அவர்களுக்கு ஒரு ஆண் மகன் உள்ளது. குழந்தை பெறுவதற்காக காயத்ரி எங்கள் ஊரான கலிங்கப்பட்டிக்கு வந்தவர் குழந்தை பிறந்த பிறகும் அங்கேயே தங்கியிருந்தார். ஆஜர் எதிரி கொத்தாளமுத்து வேலைக்கு செல்லாமல் காயத்ரியின் நகைகளை அடமானம் வைத்து செலவழித்தால் காயத்ரிக்கும், எதிரிக்கும் பிரச்சினை ஏற்பட்டது என கேள்விபட்டேன். அவ்வாறு அவர்கள் இருவருக்கும் பிரச்சினை ஏற்பட்டபோது என் மாமா வெள்ளைச்சாமி தனது மகளையும், மருமகனையும் சமாதானப்படுத்திவிட்டு வந்ததாக கேள்விபட்டேன். கடந்த 25.05.2022ம் தேதி நான் காலையில் வேலைக்கு சென்றேன். அப்போது காயத்திரியின் தம்பி

அஜித்குமார் கொட்டமடக்கிபட்டி, காளியம்மன்கோவில் திருவிழாவிற்கு வந்திருந்தார். மாலை சுமார் 06.00 மணியளவில் நான் வேலையில் இருக்கும்போது, எனக்கு போன் செய்து காயத்ரிக்கு ஏதோ பிரச்சினை என்றும், போய் பார்த்துவிட்டு வருவோம் என்றும் என்னை அழைத்தார். நாங்கள் இருவரும் இருசக்கரவாகனத்தில் காயத்ரி ஊரான விஜயகரிசல்குளத்திற்கு சென்றோம். அப்போது துலுக்கன்குறிச்சி அருகே எதிரே முத்துக்கிருஷ்ணன் என்ற எனது உறவினர் இருசக்கர வாகனத்தில் வந்தார். அவரை நாங்கள் பார்த்தோம், அவர் கையை காட்டினார், நாங்கள் நிற்காமல் விஜயகரிசல்குளத்திற்கு சென்றுவிட்டோம். அங்கு காயத்ரியின் வீட்டிற்கு சென்று பார்த்தபோது வீட்டிற்கு முன்பு கூட்டமாக இருந்தது. பின்னர் உடனே நாங்கள் காயத்ரி தங்கியிருந்த மேற்படி வீட்டின் மாடிக்கு சென்று பார்த்தோம். அங்கு காயத்ரியின் தலை கிழக்காகவும், கால் மேற்காகவும் கட்டிலுக்கு கீழே கிடந்தார். வாயின் வலது பக்கத்தில் ரத்தக்கறை இருந்தது. அவரது மகன் கோகுல்ரக்ஷன் கட்டிலுக்கு மேலே தலை கிழக்காகவும், கால் மேற்காகவும் கிடந்தான். தூங்குவது போலவே இருந்தான். அவர்கள் இறந்து இருந்தார்கள். வீட்டில் எதிரி, அவரது தந்தை இல்லை. தாயார் இருந்தார். தகவல் தெரிந்து போலீஸார் வந்தார்கள். நான், முத்துகிருஷ்ணனுக்கு தகவல் சொன்னேன், தகவல் தெரிந்து முத்துகிருஷ்ணனும், என் மாமா வெள்ளைச்சாமியும் சுமார் 07.00 மணிக்கு விஜயகரிசல்குளம் வந்தார்கள். அவர்கள் காயத்ரி மற்றும் கோகுல்ரக்ஷன் இறப்பில் சந்தேகம் இருப்பதாகவும், காவல்நிலையத்தில் புகார் கொடுக்கச் செல்வதாகவும் கூறிவிட்டு சென்றார்கள். வெம்பக்கோட்டையிலிருந்து வந்த காவல்துறையினர் விசாரித்துவிட்டு தனியார் ஆம்புலன்சை வரவழைத்து இறந்தவர்களின் உடல்களை விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஆம்புலன்சில் நானும், அஜித்குமாரும் உடன் சென்றோம். மறுநாள் 26.05.2022 ம் தேதி என் மாமா வெள்ளைச்சாமி, முத்துக்கிருஷ்ணன் மற்றும் உறவினர்கள் ஆகியோர்கள் விருதுநகர் அரசு

மருத்துவமனைக்கு வந்தார்கள். அப்போது மாமா வெள்ளைச்சாமியும், முத்துகிருஷ்ணனும் காயத்ரிக்கும் ஆஜர் எதிரக்கும் அடிக்கடி சண்டை நடக்கும் என்றும், ஒருவாரத்திற்கு முன்பு கூட ஆஜர் எதிரி கொடுமைப்படுத்தியதால் காயத்ரி குழந்தையை விட்டுவிட்டு வீட்டைவிட்டு வெளியேறி அருகாமையில் வசிக்கும் துர்க்கேஷ்வரி வீட்டில் ஒருநாள் முழுவதும் இருந்ததாகவும், பின்னர் எதிரியின் அம்மா, கொத்தாளமுத்துவை சத்தம்போட்டு, காயத்ரியை சமாதானப்படுத்தி வீட்டிற் அழைத்துவந்ததாக சொன்னார்கள். பின்னர் அஜித்குமார் என்னிடம் சம்பவத்தன்று தனக்கு 3 குறுஞ்செய்திகள் காயத்ரி செல்போனிலிருந்து அனுப்பப்பட்டதாகவும், ஆனால் அவை காயத்ரி அனுப்பியவை போன்று தெரியவில்லை என்றும், ஆஜர் எதிரி தான் காயத்ரி செல்போனை தவறாக உபயோகப்படுத்தி குறுஞ்செய்தி அனுப்பியதாக சந்தேகிப்பதாக என்னிடம் கூறினார். பின்னர் வருவாய் கோட்டாட்சியர் போலீஸார் ஆகியோர் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது, உடலை அடையாளம் காட்டச்சொன்னார்கள், அடையாளம் காட்டினேன். அதன்பிறகு கடந்த 08.06.2022ம் தேதி ஆஜர் எதிரியை வெம்பக்கோட்டை காவல்நிலையத்திற்கு வி ஏ ஓ –ம், தலையாரியும் அழைத்து வந்துள்ளதாக கேள்விபட்டு நானும், என் மாமா வெள்ளைச்சாமியும், அஜித்குமாரும் சென்றோம். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

நான் செவல்பட்டியில் எஸ் பி கே பாலமுருகன் என்பவரது தீப்பெட்டி ஆபிஸில் பணிபுரிந்து வருகிறேன். நான் காலை 09.00 மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டு மாலை 07.00 மணிக்கு திரும்புவேன். சம்பவத்தன்று நான் விஜயகரிசல்குளம் சென்றேனா இல்லையா என்பது தீப்பெட்டி ஆபிஸ் உரிமையாளர் எஸ் பி கே பாலமுருகனை விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான். திருமணம் முடிந்ததிலிருந்து காயத்ரியும், ஆஜர் எதிரியும் அடிக்கடி என் மாமா வெள்ளைச்சாமி வீட்டிற்கு வந்துசெல்வார்களா என்றால் வந்து

செல்வார்கள். அப்போது எங்கள் ஊருக்கு காயத்ரியும், ஆஜர் எதிரியும் வரும்போது அவர்களுக்குள் எந்த பிரச்சினையும் ஏற்பட்டது இல்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்னர் என் மாமா வெள்ளைச்சாமி காயத்ரிக்கும், ஆஜர் எதிரிக்கும் பிரச்சினை இருப்பதாக என்னிடம் சொன்னது கிடையாது என்றால் சரிதான். நான் விஜயகரிசல்குளம் சென்றபோது வீட்டின் முன்பு சுமார் 100 பேர் கூட்டமாக இருந்தார்கள். மாடியில் இருந்த காயத்ரியை எங்களுக்கு முன்பு வேறு யாரும் சென்று பார்த்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. எத்தனை மணிக்கு ஆம்புலன்ஸ் வந்தது என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் மாடிக்கு சென்று காயத்ரி மற்றும் கோகுல்ரக்சன் ஆகியோர்களை பார்த்ததாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மாமா வெள்ளைச்சாமி காயத்ரிக்கும், ஆஜர் எதிரிக்கும் இடையே தகராறு ஏற்பட்டதாகவோ, அல்லது வேறு எந்த விஷயத்தையோ என்னிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கேள்விபட்டதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் விஜயகரிசல்குளம் சென்று பார்க்கும் போது எதிரி மற்றும் தந்தையும் அங்கு தான் இருந்தார்கள் என்றும், வழக்கிற்காக அங்கு இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>